சுற்றுச்சூழல் ஆலோசகர் தி/ள். RRP குரூப்ஸ் மற்றும் எக்ஸ்போர்ட்ஸ் பல வண்ண கிரானைட் குவாரி சர்வே எண்: 571/1, 571/2 மற்றும் 571/3 மற்றும் தி/ள். அழகு GG கிரானைட் பல வண்ண கிரானைட் குவாரி சர்வே எண்: 505/1, 509/1, 509/2, 510, 511 மற்றும் 571/4 திட்டங்கள் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார். (இணைக்கப்பட்டுள்ளது)

<u>வருவாய் கோட்டாட்சியர், திண்டுக்கல்</u>

கருத்துக்களை சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறினால் அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார்.

**பொதுமக்கள் கருத்துரைகள் :–**

1. **திரு.பழனிச்சாமி– Ex.MLA**

சுற்றுச்சூழல் **ஆலோசகர்** அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் தங்களுக்கு புரிய வில்லை எனவும், இக்குவாரியில் வெடி வைக்கும் பொழுது அருகிலுள்ள ஊர்களுக்கு சத்தம் வருமா, விரிசல் ஏற்படுமா என்ற விளக்கமும் அளிக்க வில்லை என்றும், முன்பெல்லாம் பர்னர் வைத்து கற்களை வெட்டுவார்கள் எனவும், அதனால் அப்பகுதியை சுற்றியுள்ள சுமார் 5 (அ) 6 கி.மீ தூரத்திற்கு பெரிய அளவில் சத்தம் ஏற்படும் என்றும், தற்போது சமதள பரப்பில் இருந்து கீழே ஆழமாக கிரானைட் கல் எடுக்க இருப்பதால் அப்பகுதியை சுற்றி ஏதேனும் வேலி அமைப்பார்களா என்கின்ற விளக்கம் கொடுக்கவில்லை என்றும், அழகு கிரானைட் GG கிரானைட் பகுதியில் ஒரு வரத்து வாய்க்கால் உள்ளதா இல்லையா என்றும், நீர்நிலைகளைவிட குவாரியில் ஆழம் அதிகமானால் நீர்நிலைக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் எனவும் விவசாயத்திற்கு எவ்வாறு பயன்படுத்துவது என்ற விளக்கம் இல்லை எனவும், மேலும் இது போன்று நிறைய சந்தேகங்கள் இருக்கிறது எனவும், முதலில் அந்த சந்தேகங்களுக்கு விரிவாகவும் விளக்கமாகவும் சொல்ல வேண்டும் என்றும், அதேபோல் குவாரியினால் மக்களுக்கு என்ன பாதிப்பு, பாதிப்பில்லை என்பதை நடைமுறை வார்த்தைகளில் தெரிவிக்க வேண்டும் எனவும், டெக்னிக்கல் வார்த்தையில் தெரிவித்தால் தங்களுக்கு தெரியாது, புரியாது எனவும், ஆதலால் அதிகாரிகள் மக்களுக்கு தெளிவாக கூறி அவர்களுக்கு எடுத்துரைக்குமாறு கேட்டுகொண்டார்.

மேலும், குவாரி வருவதால் கனிம நிதி என்ற நிதி கிராம ஊராட்சிகளுக்கு நிதி கிடைக்கும் எனவும் அதன் மூலம் அடிப்படை பணிகளையும் மக்கள் நலத்திட்ட பணிகளையும் மேற்கொள்வதும் தெரியும் எனவும், இக்குவாரியின் மூலம் பெறப்படும் நிதி 10 கோடி என்கின்றனர் எனவும், இந்நிதியை தவிர ஒருகுறிப்பிட்ட சதவீத நிதியை அப்பகுதி மக்களுக்கு ரோடு வசதி, பால்வாடி வசதி, அடிப்படை பஸ்வசதி போன்ற வற்றை மேற்கொள்ளுமாறும், செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலையானது அருகில் உள்ள கிராமங்களில் வருடத்திற்கு ஒருமுறை பல்வேறு நலத்திட்ட பணிகளை மேற்கொள்கின்றனர் எனவும் அதேபோல் இவர்களும்

செய்வார்களா எனவும், இது போன்ற நிறைய சந்தேகங்கள் உள்ளன எனவும், இப்பகுதியில் தொழில்கள் வருவது ஒருவழியில் நல்லது என்றும், சுற்றுச்சூழலை பொறுத்தவரை பொதுமக்களுக்கு பாதிப்பு இருக்கிறதா, இல்லையா என்பதை நேரடியாகவும் விளக்கமாகவும் இங்கு சொன்னால் இங்குள்ள மக்கள் புரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும் என்று கூறினார்.

2. <u>திரு. சண்முகம், தமிழ்நாடு கனிமவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர்.</u>

தான் சட்ட விரோதமாக இயங்கிவரும் கல்குவாரிகளுக்கு எதிராக ஒரு அமைப்பை உருவாக்கி நடத்தி வருவதாகவும், கருத்து கூட்டம் என்பது குவாரி அமைந்தால் நிலச்சூழல், நீர்ச்சூழல், காற்றுச்சூழல், ஒலிச்சூழல் மற்றும் பல்லுயிர் சூழல், பொருளாதாரச்சூழல் எப்படி பாதிப்படையும் அதை எப்படி சரிசெய்வோம் என்பதை தெரிவிப்பதாகும் எனவும், ஆனால் இங்கு நிறுவனத்தார் வழங்கிய விளக்கம் அறிவியல் ரீதியாக உள்ளதால் பொதுமக்களுக்கு புரியாது என்றும், இப்பகுதியில் இவ்விரு குவாரிகளும் ஏற்கனவே இயங்கியவை தான் எனவும், தமிழ்நாடு சிறு கனிம விதிகள்–1959–ன் படிதான குவாரி இயங்க வேண்டும் எனவும், இக்குவாரி இவ்விடத்தில் இயங்குவதற்கு தகுதியில்லாதது எனவும், இக்குவாரியானது எந்த விதியின் படியும் இல்லை எனவும், மாசு கட்டுப்பாட்டு அதிகாரி அனைத்து பகுதிகளிலும் விளம்பரம் செய்தோம் என்றார். ஆனால் தாங்கள் ஆண்டிப்பட்டி பகுதியில் விசாரித்த போது இப்பகுதி மக்கள் தங்களுக்கு தெரியவே தெரியாது என தெரிவித்தார்கள் எனவும், மக்களுக்கு விளம்பரம் செய்தால்தான் அப்பகுதி மக்களுக்கு எந்தவித பாதிப்பு ஏற்படும் என தெரிவிக்க முடியும் என அனைத்து கூட்டத்திலும் தெரிவிப்பதாகவும், தாங்கள் இப்புத்தகம் மற்றும் EIA அறிக்கையை வைத்து பேசுவதாகவும், குறிப்பிட்ட பகுதி மக்களால் தான் அக்குவாரியால் என்னென்ன பிரச்சனை ஏற்படும் என்பதை தெரிவிக்க முடியும், ஏனென்றால் இக்குவாரி ஏற்கனவே இயங்கிய குவாரி எனவும், இக்குவாரியை சுற்றி கம்பி வேலி எதுவும் போடவில்லை என்றும், ஏற்கனவே கடந்த 5 வருடங்களில் 10 பேர் இறந்து விட்டதாகவும், 3 குழந்தைகள் இறந்த செய்தியை தானே பேப்பரில்

படித்ததாகவும், அது மட்டுமில்லாமல் குளிக்கும் போதும், துணி துவைக்கும் போதும் தலா ஒருவர் இறந்ததாகவும் தெரிவித்தார்

இக்குவாரி ஏற்கனவே இயங்கி கொண்டிருந்த குவாரி எனவும், இக்குவாரியை சுற்றி கம்பி வேலி எதுவும் அமைக்கப்படவில்லை என்றும் தமிழ்நாட்டில் சுமார் 12,000 மேற்பட்ட குவாரிகள் இயங்கி வருவதாகவும் ஆனால் எந்தவொரு குவாரியும் கம்பி வேலையை முறையாக அமைக்கவில்லை என்றும், இதனால் ஆடு, மாடுகள் மற்றும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது எனவும், இக்குவாரி ஏற்கனவே இயங்கி கொண்டிருந்த குவாரி எனவும், இக்குவாரிக்கு சட்டப்படி அனுமதி வழங்க கூடாது எனவும், ஏனென்றால் இக்குவாரி விதியை மீறி உள்ளதாகவும் இக்கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும் எனவும், அதுமட்டுமல்லாது இங்கு அளித்துள்ள புத்தகத்தில் பலதவறான தகவல்களை கொடுத்துள்ளனர் எனவும், நாங்கள் அனைத்து கூட்டங்களில் தவறான தகவல்களை அளிக்காதீர்கள் எனவும், உண்மையான தகவல்களை அளித்து கருத்து கேட்பு கூட்டத்தை நடத்துங்கள் என்றும், இதற்கு முன்பு இந்த மாநிலத்தில் EIA அறிக்கை ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்பட்டு வந்ததாகவும், மிகப்பெரிய போராட்டம் நடத்திய பின்புதான் EIA அறிக்கை தமிழில் அளிக்கப்பட்டதாகவும், அதனால் தான் மக்கள் படித்து விளக்கத்தை சொல்ல முடிகிறது எனவும் தமிழ்நாடு சிறு கனிம விதிகளின்படி இக்குவாரி 505 சர்வே எண்ணிற்கு அருகே பல வீடுகள் உள்ளது எனவும், 350 மீ தொலைவில் பஞ்சாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட வீடோ, அப்ரூவ்டு செய்யப்பட்ட வீட்டுமனைகள் இருந்தால் அக்குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது எனவும், இக்குவாரியில் வெடி வைக்கும் போது அருகிலுள்ள வீடுகள் மற்றும் வீட்டில் உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள் எனவும், இப்பகுதி ஏற்கனவே தண்ணீர் தட்டுப்பாடு உள்ள பகுதி எனவும், இங்கு 800 முதல் 900 அடி வரை எடுத்தால்தான் தண்ணீர் கிடைக்கும் எனவும், 15 ஆண்டுகளுக்கு முன்பு பிலாத்து கிராம குளத்தில் நிறைய தண்ணீர் இருந்ததாகவும், இப்பகுதி மூன்று போகம் விளைந்த பகுதி எனவும், ஆனால் தற்போது ஒரு போகம் கூட விளைவிக்க முடியவில்லை என்றும் அதற்கு காரணம் இப்பகுதியில் உள்ள குவாரிகள் மற்றும் செங்கல்

சூளைகளே காரணம் என்றும், கிட்டதட்ட 56 செங்கல் சூளைகள் அனுமதி இல்லாமலே இயங்கி வருகின்றன எனவும் இக்குவாரியின் வடமேற்கு பகுதியில் 265 மீ தொலைவில் சுமார் 25 வீடுகள் உள்ளன எனவும், ஆனால் இவர்கள் அளித்த அறிக்கையில் 350 மீட்டருக்கு அப்பால் தான் உள்ளது என காண்பிக்கப்பட்டுள்ளது தவறு எனவும், இக்குவாரியின் அறிக்கையில் ஆண்டிப்பட்டி பகுதியில் பள்ளிகூடம், கோவில்கள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் ஆண்டிப்பட்டி பள்ளிகூடம், கோவில் எல்லாம் உள்ளது என்றும், இவ்வாறு பொய்யான தகவல்களை கொடுத்தால் எப்படி கருத்து சொல்ல முடியும் எனவும், அதே போல் இக்குவாரிக்கு 5 மீட்டர் தொலைவில் கல்குளம், சொட்டகுளம் மற்றும் 500 மீ தொலைவில் பிலாத்து குளம் உள்ளது எனவும், இக்குவாரி 110 மீ ஆழம் வெட்டி எடுப்போம் என சொல்லி உள்ளார்கள் என்றும், ஏற்கனவே இக்குவாரி அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக வெட்டி எடுத்துள்ளார்கள் எனவும், தற்போது அனுமதிக்கப்பட்ட 110 மீ தோண்டி எடுத்தால், இப்பகுதியில் உள்ள நீர் நிலைகள் அனைத்தும் வற்றி விடும் என்றும், ஏற்னவே பிலாத்து குளம் வற்றிவிட்டது. அருகிலுள்ள சிறு சிறு குளங்களில் தண்ணீர் இல்லை எனவும், இக்குவாரி ஆழமாக தோண்டும் போது இப்பகுதியில் உள்ள அனைத்து நீரும் குவாரிக்குள் சென்று விடும் எனவும், அதனால் இப்பகுதியில் விவசாயம் செய்ய முடியாமல் பாலைவனமாக மாறிவிடும் என்றும் இஸ்ரேல் காசா மீது வெடிகுண்டு வீசி மக்களை கொல்கிறது எனவும், இங்கு இது போன்ற குவாரிகளால் மக்களின் வாழ்வாதாரத்தையும் விவசாயத்தையும் அழித்து கொண்டு இருப்பதாகவும், ஆகவே எந்தவிதத்திலும் இக்குவாரிக்கு அனுமதி கொடுக்ககூடாது எனவும், இக்குவாரிக்கு 50 மீ தெலைவில் EB லைன் உள்ளதால் இக்குவாரி அனுமதி வழங்க கூடாது எனவும், இரு குவாரிகளுக்கும் 150 மீ தொலைவிலேயே EB லைன் உள்ளதால் அனுமதி வழங்க கூடாது எனவும், குவாரியின் தென்புறத்தில் 10 மீ தொலைவில் மெட்டல் ரோடு உள்ளது எனவும், அந்த பகுதியில் ஆய்வு மேற்கொண்ட போது கிட்டதட்ட 35 க்கும் மேற்பட்ட லாரிகளில் கிராவல் மண் திருடப்படுகிறது எனவும், இப்பகுதியில் உள்ள விவசாயி மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து கிராவல்

மண் எடுக்க தடை உத்தரவு பெற்றுள்ளார் என்றும், ஏற்கனவே 2017 ஆம் ஆண்டு 14 மாவட்டங்களில் கிராவல் மண் எடுக்க கூடாது என தடை உத்தரவு பெறப்பட்டிருக்கிறது எனவும், அதையும் மீறி இப்பகுதியில் கிராவல் மண் எடுக்கப்படுகிறது என்றும், இப்பகுதியில் இயங்கிவரும் 56 செங்கல் சூளைகளுக்கு இங்குள்ள குளத்தின் கரைகளில் உள்ள மண் வெட்டி எடுக்கப்படுவதால் அக்குளத்தில் உள்ள நீரை பயன்படுத்துவதில் பல்வேறு பிரச்சனை உள்ளது என்றும், இது தொடர்பாக அப்பகுதி VAO–வை தொடர்பு கொண்டு கேட்டபோது தங்களுக்கு கொலை மிரட்டல் விடுவதாகவும் தெரிவிக்கிறார் எனவும், சட்டபடி குவாரிகளில் நாணல் வெடி மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆனால் இங்கு மிகப்பெரிய அளவில் வெடி வைப்பதால் மிகப்பெரிய அளவில் அதிர்வு ஏற்படும் எனவும், கடந்த சில நாட்களாக தொடர்ந்து கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் திடீரென சத்தம் ஏற்படுவதாகவும், அது எதனால் ஏற்படுகிறது என கேட்டால் யாரும் பதில் சொல்வதில்லை எனவும், அதேபோல் இக்குவாரியின் 25 மீ தொலைவில் உள்ள வீடுகளில் மிகப்பெரிய பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் ஏற்படும் குவாரியானது பெஞ்ச் டைப்பில் வெட்டி எடுக்கப்படவில்லை எனவும், எனவே இக்குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என்றும், குவாரியால் வழங்கப்பட்ட EIA அறிக்கையில் 45 வகையான ஆவணங்களை இணைக்கவேண்டும் எனவும், கிட்டதட்ட 500 குவாரிகள் கருத்து கேட்பு கூட்டத்தில் தொடர்ந்து சொல்வதாகவும், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மக்கள் குறை கேட்பு கூட்டம் மற்றும் விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்திலும் தொடர்ந்து புகார் தெரிவித்து வருவதாகவும், முக்கியமாக 45 ஆவணங்களை இணைத்தால்தான் அவற்றை படித்து கருத்து தெரிவிக்க முடியும் எனவும், இங்கு 10 வகையான ஆவணங்கள் கூட இணைக்கப்பட வில்லை அதாவது VAO சான்றிதழ், தாசில்தார் சான்றிதழ், RI சான்றிதழ் பொது தணிக்கை குழு அறிக்கை வைக்க வேண்டும் ஆனால் எந்த ஆவணமும் இணைக்கப்படவில்லை. ஆகவே இக்கருத்து கேட்பு கூட்டத்தை நடத்துவதே தவறு எனவும், இக்குவாரி இயக்குவதற்கு அனுமதி கொடுக்கவும் முடியாது என்றும் தெரிவித்தார்.

மேலும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மத்திய பிரதேசம் போன்ற எல்லா பகுதியிலும் மழை பெய்வதாகவும். ஆனால் தமிழ்நாட்டில் மே மாதத்தில் இருப்பது போல் வெயில் இருப்பதாகவும், இதற்கு காரணம் தமிழ்நாட்டில் பசுமை வளையம் அழிக்கப்பட்டதாகும். இவர்கள் 30% மரங்கள் வைப்பதாகவும் தெரிவித்துள்ளன. இதேபோல் தமிழ்நாட்டில் உள்ள 12,000 குவாரிகளும் மரங்கள் வைத்தால் நமக்கு மிக பெரிய அளவில் பாதுகாப்பு இருக்கும் எனவும், பசுமைஅரண்கள் அழிக்கப்பட்டதால் தான் மழைப்பொழிவு மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாடு முழுவதும் சுற்றுச்சூழல் தொடர்பான அறிக்கையில் கிரானைட், மணல், மண் கிராவல் போன்றவை தொடர்ந்து திருடப்பட்டுவருகிறது என்றும், இப்பகுதிக்கு அருகே 500 மீ இடைவெளியில் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டத்தை இணைக்கும் வகையில் தேவாங்கு சரணாலயம் அமைக்க தமிழ்நாடு அரசு கொண்டுவந்துள்ளது. ஏனென்றால் தேவாங்கு அரிய வகை உயிரினமாகும். வெடிசத்தம் ஏற்பட்டால் தேவாங்குகளுக்கு கருச்சிதைவு ஏற்படும் என்றும், ஆகவே எந்த விதத்திலும் இந்த கல்குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது எனவும், இந்த திமுக அரசு தனது 200-வது தேர்தல் அறிக்கையில் கிரானைட் குவாரிகளை அரசே எடுத்து நடத்தும் என்று தெரிவித்தது போல இந்தகுவாரியை தமிழக அரசே எடுத்து நடத்த வேண்டும் எனவும், அப்பொழுதுதான் பல்வேறு விதிமீறல்கள் நடைபெறாது எனவும், இக்குவாரிகளுக்கு எந்தவித அனுமதியும் கொடுக்கக்கூடாது என்று கூறினார்.

3. <u>திரு. கலியுகமுருகன் ஆண்டிபட்டி</u>

இங்கு பத்து சர்வே எண்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், தங்கள் ஊரில் மொத்தம் 5,000 பேர் வசிப்பதாகவும், தங்களுக்கு இக்கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனவும், பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தாங்கள் பலமுறை பிரச்சனை செய்தும் தங்களது சொந்த காசு செலவு செய்து கோர்ட்டுக்கு சென்று ஊருக்கு பொதுமக்களை திரட்டி போராட்டம் செய்து முதலில் ஒரு குவாரியை நிறுத்தி வைத்துள்ளதாகவும், தற்போது மேலும் ஒரு குவாரிக்கு அனுமதி கோருவது தொடர்பாக பொதுமக்களுக்கு தகவல் ஏதும்

தெரிவிக்கவில்லை எனவும், ஐயா தெரிவித்தது போல் எங்கள் பகுதியில் எந்தவொரு துண்டு பிரசுரமோ, நோட்டீஸோ ஒட்டபடவில்லை என்றும் தங்கள் பகுதியில் சுடுகாடு மற்றும் ஒட்ட குளம் என்ற குளம் அப்பகுதியில் உள்ளது எனவும், ஒட்டகுளத்தில் ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லை என்றும், அதன் அருகில் தான் 100 நாள் வேலை நடைபெறுகிறது என்றும், 30 மீ தொலைவில் வீடுகள் உள்ளதாகவும், விவசாய நிலம் பாதைக்கு மறுபக்கத்திலும், எதிர்பகுதியில் குவாரியும் அமைந்துள்ளது என்றும், இக்குவாரியால் ஏற்கனவே 5,6 பேர் இறந்துள்ளனர் எனவும், குவாரியை சுற்றி எந்தவித பாதுகாப்பும் இல்லை எனவும் குவாரியை சுற்றி விவசாய நிலங்கள் உள்ளதால் இக்குவாரிக்கு அனுமதி வேண்டாம் என்று கூறினார்.

4. <u>திரு.ஐயப்பன் –ஆண்டிபட்டி.</u>

சர்வே எண்: 573 அருகில் தான் உள்ள ஆண்டிபட்டி தான் தனது சொந்த ஊர் எனவும், தான் **APJ** அப்துல் கலாம் இளைஞர் மன்றத்தின் சங்கத்தின் செயலாளர் எனவும், தான் 2018–ம் ஆண்டு ஊர்மக்கள் மற்றும் தனது சங்கத்தின் சார்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் **AD** மைன்ஸ் அவர்களுக்கும் **MLA, VAO, Revenue Inspector** அவர்களுக்கும் மனு அளித்ததாகவும், அதன் பிறகு 2021–ல் ஒரு மனு, 2022–ல் ஒரு மனு அதன் பிறகு மாபெரும் காத்திருப்பு போராட்டம் தங்கள் ஊர் மக்களுடன் நடத்தியிருப்பதாகவும், முன்னாள் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அண்ணன் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடத்தி இருப்பதாகவும், இவ்வளவு போராட்டத்திற்கு பிறகு மீண்டும் இங்கு கருத்து கேட்பு கூட்டம் தொடர்பாக நேற்றிரவு 8 மணிக்கு வாட்ஸ் அப் மூலமாக தெரிய வந்தது எனவும், எங்கள் பகுதியில் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பாக எவ்வித அறிவிப்பும், நோட்டீஸ்–ம் ஒட்டப்படவில்லை எனவும், குவாரிக்கு அருகிலேயே கல்குளம், ஒட்டக்குளம் ஒன்று உள்ளது ஒட்டகுளம் பகுதியில் சுமார் 25 வீடுகள் உள்ளன எனவும், இவர்கள் தெரிவிக்கும் பிலாத்து கிராமம் குவாரியிலிருந்து சரியாக 2.6 கி.மீ தொலைவில் உள்ளது என்றும், ஆனால் அருகிலுள்ள 500மீ தொலைவில் உள்ள எங்கள் ஊரில் எந்தவொரு விளம்பரமும் செய்யவில்லை என்றும், கடந்த 4 ஆண்டுகளில் இப்பகுதியில் கம்பி வேலி

அமைக்காததால் கிட்டதட்ட 6 உயிர்கள் சேதமடைந்தது எனவும், 2017-18 ஆண்டுகளில் இப்பகுதியிலுள்ள குவாரிகளால் ஏற்பட்ட சேதங்களுக்கு அறிக்கை கோரப்பட்டது எனவும், இது நாள் வரை அறிக்கை ஏதும் பெறப்படவில்லை என்றும், உயிரிழப்பு அனைத்திற்கும் பதில் சொல்லவேண்டும் எனவும், அந்நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ஏற்கனவே இக்குவாரியில் முறையான பாதுகாப்பு இல்லாத காரணத்தால் 4 உயிர்கள் பலியாகி உள்ளது எனவும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விட்டதாகவும் இக்குவாரி தொடர்பாக அதிகாரிகள் முறையாக ஆய்வு செய்து குவாரிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்றும் கேட்டு கொண்டார்.

5. <u>திரு.சொக்கலிங்கம், பிலாத்து.</u>

இக்குவாரி அமைவதால் நமது ஊராட்சிக்கு பணம் வருவது நமக்கு நல்லதுதான் எனவும், இக்குவாரியால் பொது மக்களுக்கு என்னென்ன இடையூறு வரும் என்பதை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து சட்டப்படி அனுமதி வழங்க வேண்டும் எனவும், வாய்ப்புகள் இருந்தால் ஆண்டிப்பட்டி பகுதியில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் மீண்டும் ஒரு கருத்துகேட்பு கூட்டம் நடத்த வேண்டும் எனக் கேட்டு கொண்டார்.

6. <u>திரு.S.ஆவடைச்சிக்கண்ணன், பிலாத்து கிராமம்.</u>

தனது தோட்டத்தின் அருகில் தான் குவாரி உள்ளது எனவும், குவாரிக்கு அனுமதி வழங்கலாம் எனவும் கூறினார்.

7. <u>திரு.ரவிக்குமார், ஆண்டிப்பட்டி</u>

இக்குவாரி எந்த ஊரில் அமைந்துள்ளது என்பதை தெளிவாக எடுத்துரைக்குமாறும், குவாரி அமைந்தள்ளது ஆண்டிப்பட்டி கிராமம் ஆனால் இங்கு பிலாத்து கிராமம் என குறிப்பிடப்பட்டுள்ளது. பிலாத்து கிராமத்திற்கும் ஆண்டிபட்டி கிராமத்திற்கும் சுமார் 3 கிமீ தூரம் உள்ளது எனவும், இக்குவாரிக்கும் ஆண்டிபட்டிக்கும் 500 மீ தூரம் உள்ளது என்று கூறினார்.

8. **திரு.ஜீவானந்தம், ஆண்டிப்பட்டி**

வடக்கே ஒரு கிரானைட் குவாரி, தெற்கே ஒரு கிரானைட் குவாரி, மேற்கே டயரை எரித்து ஆயில் தாயாரிக்கும் கம்பெனி உள்ளதாகவும், இக்கம்பெனிக்கு எதிராக மாசு கட்டுப்பாடு வாரியத்தில் கிட்டதட்ட 5 வருடம் போராடி வருவதாகவும், ஆய்வு செய்ய அதிகாரிகள் வருவதற்கு ஒருவாரத்திற்கு முன்பே ஆயில் பேக்டரியை நிறுத்தி விடுவார்கள் எனவும், கடந்த 4 வருடங்களுக்கு முன்பு எங்களது காசு ரூ.2 லட்சம் செலவு செய்து காத்திருப்பு, உள்ளிருப்பு போராட்டம் போன்ற போராட்டங்களை நடத்தி இக்குவாரியை நிறுத்தியதாகவும், ஆனால் அதற்கு தற்போது கருத்து கேட்பு நடத்தப்படுவது மற்றும் ஆண்டிப்பட்டி பகுதியில் விளம்பரம் ஏதும் செய்யாததை வண்மையாக கண்டிப்பதாகவும், அரசு குவாரி மற்றும் ஆயில் பேக்டரி நடத்த வேண்டும், இல்லை எங்களை சாகடிக்க வேண்டும் இரண்டில் ஏதாவது ஒன்று செய்யுங்கள் என்று கூறினார்.

9. **திரு.R.P.மணி, ஆண்டிப்பட்டி**

தங்கள் ஊர் பொதுமக்களுக்கும் இயற்கைக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படாமல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டு கொண்டார்.

10. **திரு.T.சரவணன், ஆண்டிபட்டி**

இக்குவாரி ஆண்டிபட்டி, தொக்கம்பட்டி, பிலாத்து பகுதியில்தான் அமைந்துள்ளது எனவும், ஆகவே, இப்பகுதி மக்கள் அனைவரிடமும் கருத்துக்களை கேட்க வேண்டும் என்றும், ஆண்டிப்பட்டி பகுதியில் உள்ள மக்கள் 10 பேர் மட்டுமே கருத்து தெரிவித்துள்ளதாகவும், இக்குவாரியினால் 60 குடும்பங்கள் பயன்பெறும். ஆனால் 600 குடும்பங்கள் பாதிப்படையும் எனவே அனுமதி வழங்க கூடாது என்று கூறினார்.

11. **திரு.முகிலன், கரூர் (தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர்).**

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டம், பிலாத்து கிராமத்தில் தி/ள். RRP குரூப்ஸ் மற்றும் எக்ஸ்போர்ட்ஸ் பல வண்ண கிரானைட் குவாரி சர்வே எண்: 571/1, 571/2 மற்றும் 571/3 மற்றும் தி/ள். அழகு GG கிரானைட் பல வண்ண கிரானைட் குவாரி சர்வே எண்: 505/1, 509/1, 509/2, 510, 511

மற்றும் 571/4 கிராணைட் குவாரி அமைப்பதற்கான அனுமதி கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள தலைவர், கோட்டாட்சியர் அவர்களுக்கும், இந்தக் கூட்டத்தினை நடத்திக் கொண்டிருக்கின்ற மாசுக்கட்டுப்பாடு வாரிய பொறியாளர் அவர்களுக்கும், வருவாய்துறை, காவல் துறை ஏனைய துறை அதிகாரிகள், உரிமையாளர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துக்கொண்டார். மேலும், டெல்லி உச்சநீதிமன்றமும், சென்னை உயர் நீதிமன்றமும் கல்குவாரிகளை ஆய்வு செய்ய திரு.சகாயம் அவர்கள் தலைமையில் 2014 செப்டம்பரில் நியமிக்கப்பட்ட போது அவருடன் ஓராண்டு காலம் பயணித்து மதுரை மாவட்டத்தில் மட்டும் 83 குவாரியில் 1 கோடி 13 இலட்சம் ரூபாய் முறைகேடு நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது என்றும், தற்போது டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை 5000 ஏக்கர் இல்ல, 38500 ஏக்கர், இதில் என்னென்ன பிரச்சனை வரும் என்பதை ஊர் கிராம மக்களை திரட்டி மாவட்ட ஆட்சியர் சங்கீதா அவர்களிடம் மனு நவம்பர் 18-ல் கொடுத்தேன். அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு டிசம்பர் 9 சட்டபேரவை சிறப்பு கூட்டத்தை கூட்டி டங்ஸ்டன் சுரங்கத்திட்டத்தை ரத்து செய்து தீர்மானம் நிறைவேற்றியது. அது தொடர்பாக அமைச்சர் துரை முருகன் அவர்கள் முகிலன் அவர்கள் ஆதாரத்துடன் தெரிவித்தார் அதனால் தமிழக அரசும் செய்தது என சட்டசபையில் தெரிவித்தார் எனவும், அதுமட்டுமல்லாது கடந்தமாதம் 20-ம் தேதி பழனி இடும்பன் மலை, ஐவர் மலை, ஒட்டன்சத்திரம் பகுதிகளில் மாலிப்பினம் என்ற கனிமத்தை கண்டறிந்து ஏலம் விட தயாராக வைத்திருந்த அரசுக்கு மறைத்த ஆவணத்தை மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் கவனத்திற்கு, நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் நாடாளுமன்றத்தை இதை பற்றி அறிக்கையாக கொடுத்து பேச வைத்தவன் எனவும், சட்ட விரோதமாக செயல்படும் மணல் குவாரிகளுக்கு எதிராக 2017-ம் ஆண்டு நாங்கள் போராட்டம் நடத்தியதால் மணல் குவாரிகள் அனைத்தும் மூடப்பட்டது எனவும் தனக்கு முன்பு இத்திட்டத்தை வடிவமைத்த நிர்வாகிகள் அறிவிக்கும் போது காற்று மாசு, மண் மாசு, ஒலிமாசு, (பள்ளிச் சூழல் மாசு), சமூக சூழல் மாசு அனைத்தும் நடக்கும் எனவும், இக்குவாரி ஏற்கனவே அமைய பெற்ற குவாரி எனவும், எங்களது

தொடர் போராட்டத்ன் காரணமாக தேசிய பசுமை தீர்ப்பாயம் 2015-ம் ஆண்டு 5 ஏக்கருக்கு மேல் நடைபெறும் குவாரிகளுக்கு மீண்டும் கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டும் என ஆணையிட்டது. அதன் அடிப்படையில் தான் தற்போது கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுகிறது என்றும், குவாரியின் உரிமையாளர் அளித்துள்ள அறிக்கையில் தான் தவறான தகவல்களை அளித்தோ அல்லது உண்மைக்கு புறம்பான கருத்துக்களை கொடுத்தோ இக்குவாரிக்கு அனுமதி பெற்று இருந்தால் இக்குவாரியின் அனுமதி ரத்து செய்யப்படும் என்று அறிவேன் என்று தெரிவித்துள்ளார் எனவும், இக்குவாரியால் வழங்கப்பட்ட ஆவணங்களில் கிராம வரைபடம் கொடுக்கவில்லை எனவும், அவ்வாறு அளித்திருந்தல் அருகிலுள்ள ஆண்டிப்பட்டி கிராமம் தெளிவாக தெரிந்திருக்கும் எனவும், அவர்கள் அளித்த Topo Sketch-ல் வீடு, ஓடை எதுவும் இல்லை என்றும், இக்குவாரி கருத்து கேட்பு கூட்டம் தொடர்பாக ஆங்கில நாளிதழில் வெளியிட ரூ.3,00,000 லட்சம் அளித்துள்ளதாகவும், உள்ளூர் தமிழ் நாளிதழிலும் வெளியிட்டுள்ளனர். 3,00,000 லட்சம் ரூபாய் செலவழித்து பத்திரிக்கை விளம்பரம் செய்கிறவர், ஒரு கிராம வரைபடம் எடுப்பது கிடையாது எனவும், 505/1-ல் அமையவுள்ள அழகு கிரானைட் குவாரிக்கு வட கிழக்கு பகுதியில் வீடு அமைந்திருப்பது லேடர் FMB-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 65 மீ தொலைவில் உள்ளது, 300 மீ தொலைவில் வீடு இல்லை, பள்ளிகள் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டப்படி இந்த குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது எனவும் குவாரியின் வட மேற்கு பகுதியில் ஊர் நத்தம் உள்ளது எனவும், 240,248,277,218,297 ஆகிய பகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட மனைகள் உள்ளது. இக்குவாரியின் உண்மையான உரிமையாளர் ஜெயின் வடமாநிலத்தை சார்ந்தவர் என்றும், நிறைய பேர் சொல்லாமல் அந்த பகுதியில் ஒரு காலத்தில் 40 வருடங்களுக்கு முன்பு வீடு இருந்தது. ஆனால் தற்போது இல்லை என்றும், ஈரோடு, நாமக்கல், நில அளவையர் சுற்றறிக்கை எண் 6606/2024 2.09.2024 UDR நத்தம் நில அளவை பதிவேட்டில் பதியப்பட்ட வீடு சிதிலம் அடைந்து இடிந்து இருந்தாலோ எவ்வாறு அளவை பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்ததோ, அதை அவ்வாறே எடுத்து கொள்ள வேண்டும் எனவும், கல்குவாரி

தொடர்பான துர அளவீடு வரைபட அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட வீடு, வீட்டு மனை, ஓடை, பாதை ஆகியவற்றை கிராம வரைபடம் புல வரைபடம் மற்றும் அ பதிவேடுகள் ஆகியவற்றை சரிபாரித்தே வழங்க வேணடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இக்குவாரியை சுற்றி 25-க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளதால் இந்த GG குவாரிக்கு சட்டப்படி அனுமதி வழங்க கூடாது என்றும். சிறு கனிம விதிகள் 1959-ல் 1A சட்டபிரிவில் குடியிருப்பு பகுதிகளுக்கு 300 மீ சுற்றளவில் கல்குவாரிக்கு குத்தகை வழங்க கூடாது என தெரிவித்துள்ளதாகவும், 300 மீ சுற்றளவில் தற்காலிக தொழிலாளர் குடியிருப்பு இருக்கக் கூடாது எனவும் AD மைன்ஸ் சுற்றறிக்கை கொடுத்துள்ளது எனவும், குவாரியில் தற்காலிக ஷெட் போட்டு கொள்ளலாம் என்றும், மாலை 5 மணிக்குமேல் அந்த ஷெட்டில் யாரும் இருக்க கூடாது என்றும், எனென்றால் கடந்த 2024 மே 1 -அன்று விருதுநகர் மாவட்டம், ஆவியூரில் வெடி வெடித்ததால் 6 பேர் இறந்து விட்டனர் என்றும், இக்குவரியின் அட்சரேகை, தீர்க்கரேகை ஆவணங்களில் தெற்கே 234மீ, மேற்கே 196 மீ, கிழக்கே 164, 99, 166,263,166மீ தென்கிழக்கே 116 மீ தொலைவில் வீடுகள் எள்ளது. கிட்டதட்ட 70 க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது இந்த அழகு கிராணைட் குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது, புல எண்:510-ல் குவாரியின் அருகே கிணறு உள்ளது, கிணற்றுக்கு 50 மீ தொலைவில்தான் குவாரி அமைய வேண்டும், குவாரிக்கு 50 மீ தொலைவில் இரண்டு குளங்கள் கல்குளம், ஒட்டகுளம் உள்ளது என்பதை குவாரியில் PPT-ல் சொல்லி இருக்கிறார்கள் மின்சாரலைன் 50 மீ தொலைவுக்குள் இருந்தால் அனுமதி வழங்க கூடாது. ஆனால் குவாரியின் தென் மற்றும் கிழக்கு புலத்தில் 10 மீ இடைவெளி கூட இல்லாமல் மின்சாரலைன் செல்கிறது எனவும் ஆகவே இக்குவாரி சட்டப்படி இயங்க கூடாது. மேலும், குவாரியின் தென்கிழக்கு பகுதியில் இடைவெளியே இல்லாமல் EB லைன் செல்கிறது எனவும், அதனால் அனுமதி தர இயலாது எனவும், சிறுகனிம விதியில் விளக்கம்-1ல் பொதுசாலை மற்றும் செயற்கையான சாலை எனவும், மெட்டல்ரோடு என்பது செயற்கையான சாலை எனவும், அதற்கு 50 மீ இடைவெளி வேண்டும் என்றும் ஆனால் இக்குவாரி அப்படி விடவில்லை எனவே இக்குவாரிக்கு அனுமதி வழங்க

முடியாது என்றும், இக்குவாரியில் பென்ஞ் முறையில் கற்களை வெட்டி எடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இக்குவாரியில் வெட்டி எடுக்கவில்லை என்றும், இதேபோல் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டத்தில் பெஞ்ச் முறையில் வெட்டி எடுக்காததால் குவாரியில் சரிவு ஏற்பட்டு 6 பேர் கடந்த மாதம் இறந்து விட்டார்கள் எனவும், எனவே, பென்ஞ் குழி இல்லாததால் இக்குவாரிக்கு அனுமதி வழங்க முடியாது என்றும், இக்குவாரி அனுமதிக்கப்பட்ட பரப்பளவை விட அதிகமாக வெட்டி எடுத்திருக்கிறார்கள் எனவும், இதனால் அரசுக்கு பலகோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், அதனை கோட்டாட்சியர் அவர்கள் மீட்டு தரவேண்டும் எனவும், வெடி வெடிப்பதற்கு நாணல் வெடி தான் பயன்படுத்துவோம், 1–2 மணிக்குள் தான் வெடிப்போம். ஜிக்ஜாக் முறையில் மணல் மூட்டைகளை அடுக்கி தார்பாய் போட்டு லாரி டயர் போட்டுதான் சத்தம் அதிர்வு வராமல் வெடிப்போம் என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், நாணல் வெடி என்பது கைதுப்பாக்கியில் பட்டாசு வெடிப்பது போல் 25 நொடிகளுக்கு ஒரு முறை வெடிக்கும். ஆனால் குவாரிகளுக்கு பயன்படுத்தப்படும் வெடிமருந்து சட்ட விரோதமாக வெடிமருந்தை கடத்தி வெடி வெடிக்கிறார்கள் எனவும், சீரியல் பிளாஸ்டிங் கிடையாது, மதியம் 1–2 மணிக்கு வெடிப்பதில்லை. இவர்கள் இஷ்டத்திற்கு வெடி வெடிப்பதால் இக்குவாரிக்கு அனுமதி தர கூடாது எனவும், குவாரி இயங்கும் நேரம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டுமே, 5 மணிக்கு மேல் குவாரியில் எவ்வித செயல்பாடும் நடைபெறகூடாது எனவும், இக்குவாரி தொடர்பாக 45 ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும், EB–யிடம் அனுமதி அறிக்கை வாங்கவில்லை எனவும், PWD, BDO –விடமோ குளம் தொடர்பான அறிக்கை பெறப்படவில்லை 5 கி.மீ தொலைவில் தேவாங்கு சரணாலயம் அமைக்கப்படவுள்ளதை இவர்கள் அளித்த சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தெரிவிக்கவில்லை எனவும், 45 ஆவணங்களை சமர்பிக்க படாததால் இக்குவாரிக்கு அனுமதி வழங்க இயலாது எனவும், இக்குவாரியானது 10 ¼ ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. மேலும், இங்கு 2500 ஆல, அத்தி, வேம்பு, புங்கை போன்ற நாட்டு மரங்களை வைப்போம் என கூறியுள்ளனர் எனவும், இக்குவாரி ஏற்கனவே 2016 முதல் இயங்கிய குவாரி எங்காவது ஒரு

மரமாவது வைத்துள்ளார்களா எனவும் 1 க்யூபிக் மீட்டர் 1 ¼ லட்சம் ஒரு கல் 5 முதல் 12 க்யூபிக் மீட்டர் 10 லட்சம் 1 டன் என கோடி கோடியாய் சம்பாதிக்கிறார்கள் எனவும், நமது MLA தெரிவித்தது போல் செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம் செய்வது போல் செய்யவேண்டும் என்றும் ஆனால் எந்தவொரு பணியையும் இக்குவாரி மேற்கொள்ளவில்லை என்றும், பசுமை வளையம் அமைக்கப்படவில்லை என்றும், கம்பிவேலி அமைப்போம் என தெரித்துள்ளனர் 2023 ஆகஸ்ட் மாதம் ஒரு சுற்றறிக்கை போடப்பட்டது. அதில் செப்டம்ர் 30 2023-க்குள் எந்தெந்த குவாரிகள் கம்பிவேலி போடப்பட்டுள்ளது போடவில்லை என்பதை கணக்கெடுத்து அறிக்கை சமர்பிக்க வேண்டும் என அரசாங்கம் கூறியுள்ளது என்றும், தேவாங்கு சரணாலயத்தில் உள்ள அரிய உயிரினமான தேவாங்குகளுக்கு வெடி சத்தத்தால் கற்பசிதைவு ஏற்படும் எனவும் எத்தனை லட்சம் செலவு செய்தாலும், தேவாங்குகளை உருவாக்க முடியாது. 10 கீ.மீ சுற்றளவில் வனவிலங்கு சரணாலயம் இருந்தால் அனுமதி வழங்க கூடாது என்பதால், 5 கீ.மீ தொலைவில் தேவாங்கு சரணாலயம் உள்ளதால் குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என்றும் கூறினார். திமுக அரசு அளித்த தேர்தல் வாக்குறுதியில் இது போன்ற கிராணைட் குவாரிகளை அரசே ஏற்று நடத்தும் என தெரிவித்துள்ளதால் எந்த தனி நபரும் ஏற்று நடத்த கூடாது என தெரிவித்தார்.

தண்ணீர், நிலம், ஒலி மாசு போன்றவை தெரியும் எனவும், ஆனால் காற்று மாசு நமக்கு தெரிவதில்லை என்றும், இது தொடர்பாக ஒன்றிய அரசு பள்ளிகளில் சர்கரை போர்டு அமைக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது என்றும், இம்மாவட்டத்தின் எல்லையுள்ள திருபுவனத்தில் நடைபெற்ற கருத்து கேட்பு கூட்டத்தில் கரூர் மாவட்ட VAO உடன் கலந்து கொள்ளும் போது இங்கு 6 வயது குழந்தைக்கு சர்கரை நோய் உள்ளது என அழைத்து வந்தார்கள் எனவும், இங்கு காற்று மாசுபாட்டை அளவிடும் கருவிகள் ஏதுமில்லை என்றும், ஆண்டபட்டி பகுதியில் 1000 வீடுகள் உள்ளது என்றும் இப்பகுதியில் உள்ள தம் எதிர்கால சந்ததிக்கு என்ன கொடுக்க போகிறோம் எனவும், சர்கரை நோயும், மலட்டுதன்மையும்தான் என்று நான் கூறவில்லை ஒன்றிய அரசின் அறிக்கை கூறுகிறது என்றும். 5 இடங்களில் மூன்று

மாதங்கள் தொடர்ந்து காற்று மாசுபாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என இந்நிறுவன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவே அதற்கான அறிக்கையை வழங்குமாறும், இக்குவாரி மூலம் ரூ.5 கோடி ரூபாய் வருமானம் பெறுவதாக கிராம பஞ்சாயத்தார் தெரிவித்துள்ளனர் எனவும், W.P No.136/2009 – ஆணை நாள் 26.07.2023 உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அனுமதிக்கப்பட்ட அளவு தான் சாலைகளில் எடுத்து செல்லவேண்டும், அதற்கு மேல் சென்றால் 1 யூனிட்டுக்கு ரூ.20,000/– அபராதம் வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் அக்கனிமத்தை இறக்கி வைத்து விட்டு மீண்டும் வேறு தான் எடுத்து செல்ல வேண்டும். மதுரையை சேர்ந்த அதிகாரிக்கு நீதிமன்ற தீர்ப்பை அவமதித்தல் கீழ் 1 மாத சிறை தண்டனை, கோவை கமிஷ்னருக்கு அபராதம் மற்றும் 4 தாசில்தாரர்களுக்கு 3 மாத தண்டனை வழங்கப்பட்டது என்றும், அதிகபடியான எடை கிராம சாலை என்றால் 10 டன் 6 சக்கர வாகனம் என்றால் 12 டன் அதாவது மாநில சாலை, MDR, ODR சாலைகளில் எடுத்து செல்லலாம் அதிகபட்சம் 52 டன் வரை எடுத்து செல்லலாம் எனவும், ஆனால் இங்கு 100 டன் வரை எடுத்து செல்லப்படுகிறது. 1 கன மீட்டர் என்பது 3 டன் 5 கனமீட்டர் என்றால் 15 டன் ஆகும், இப்பகுதியில் அதிகபடியான கிரானைட் கல்களை கிராம சாலைகளில் ஏற்றி செல்வதால் சாலைகள் பாதிப்படைகின்றன எனவும், குவாரி தொடர்பான முடிவுகளை மாவட்ட நிர்வாகமோ, மாசு கட்டுப்பாடு அதிகாரியோ எடுப்பதில்லை எனவும், SIEAA என்ற மாநில சுற்றுச் சூழல் மதிப்பீட்டு ஆணையம் தான் மேற்கொள்கிறது என்றும், RR குரூப் குவாரியை பொருத்தவரை கிழக்கில் 285 மீ தொலைவில் அங்கீகரிக்கப்பட்ட வீடு உள்ளதாகவும், 157 மீ மற்றும் 195 மீ தெலைவில் வீடுகள் உள்ளது எனவும், மேற்குபுற பகுதியில் EB லைன் மற்றும் நத்தம் பகுதியும் உள்ளது, நீர் நிலை உள்ளது என்றும் RR குரூப் குவாரியில் பொது சாலை உள்ளது, பென்ஞ் முறை இல்லை அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக வெட்டி எடுத்துள்ளது நாணல் வெடி பயன்படுத்துவதில்லை, கம்பிவேலி அமைக்கப்படவில்லை, EIA அறிக்கை குறிப்பிட்டுள்ள 45 வகையான அறிக்கைகள் இணைக்கப்படவில்லை, அக்குவாரியால் தொடர்ச்சியாக காற்று மாசு

ஏற்படுகிறது எனவும், பசுமை வளையம் அமைக்கப்படவில்லை எனவும், குவாரியிலிருந்து 5 கீ.மீ சுற்றளவில் தேவாங்கு சரணாலயம் உள்ளதால் அந்த உயிரினங்களுக்கு கற்பச்சிதைவு ஏற்படக் கூடும் எனவும், ஆகவே இந்த குவாரியையும் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்றும், அதிக படியாக லோடுகளை சாலைகளில் ஏற்றி செல்கிறது எனவே இந்த குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என்றும், RR குரூப் குவாரியை பொருத்த வரையில் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள், நத்தம், 1 கி.மீ தொலைவில் ஆண்டிபட்டி கிராமம் போன்றவை கிராம வரைபடம், நில வரைபடம் மற்றும் அ பதிவேட்டில் உள்ளதால் இக்குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது EB line, பொதுசாலை, நீர் நிலைகள், நத்தம் போன்றவை உள்ளது. ஆகவே இக்குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது. குடிநீர் வடிகால் அமைப்பின் மூலம் அமைக்கப்பட்ட போர், மேல் நிலை நீர் தேக்க தொட்டி போன்றவை ஆண்டிபட்டி கிராமத்தில் உள்ளது 50 மீ தொலையிவில் ஒட்டகுளம், கல்குளம், போன்ற குளங்கள் உள்ளதால் குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது, அதிகபடியான வருமானம் தரக்கூடிய இது போன்ற கிரானைட் குவாரிகளை திமுக அரசு தேர்தல் அறிக்கையில் தெரிவித்தது போல் அரசே ஏற்று நடத்த வேண்டும். இந்த ஊரில் ஏற்கனவே நிலத்தடி நீர் மட்டம் அதிகபடி சரிந்துள்ளதால் இக்குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது. எனது பெயரை தெரிவித்தே முதல்வர் அவர்கள் கரூர், தூத்துக்குடி போன்ற பகுதிகளில் வாக்கு சேகரித்துள்ளார். இந்தியாவில் 146 மாவட்டங்கள் அபாயகரமான மாவட்டங்கள், நிலச்சரிவு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் குறிப்பாக அதிகபடியான மழை, அதிகபடியான வெயில். அதிகபடியான நிலச்சரிவு போன்றவை எல்லாம் இக்குவாரிகளால் பயன்படுத்தப்படும் வெடிபொருள் மற்றும் பசுமை வளையம் அமைக்கப்படுவதில்லை என்பதாலேயே உண்டாகிறது எனவும், குவாரிகள் பசுமை வளையம் அமைத்திருந்தால் மழை எல்லா நாளும் வந்திருக்கும் எனவும், 26 வகையான கனிமங்களுக்கு கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டாம் என் மத்திய அரசு அறிக்கை வந்துள்ளது எனவும் அதனால் மனிதனுடைய வாழ்க்கை அழிவின் விளிம்பில் உள்ளது என்றும் 19.09.2024 அன்று 500 பேரை திரட்டி SIEAA முன்பு போராட்டம்

நடத்தினோம் என்றும், அப்பொழுது கருத்துகேட்பு கூட்டம் தொடர்பான ஆவனங்களை தாங்கள் பார்பதில்லை என அதிகாரிகள் தெரிவித்ததாக கூறினார். சட்ட அடிப்படையில் செய்தால் உறுதுணையாகவும், சட்டத்தை விரோதமாக செயல்பட்டால் உங்கள் மீது நடவடிக்கை பாயும் எனவும் இக்குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என்று கூறினார்.

12. <u>திரு.G.மகேந்திரன் – தென்னம்பட்டி</u>

இக்கருத்து கேட்பு கூட்டத்தை குவாரி அமைந்துள்ள பகுதியான ஆண்டிப்பட்டியில் வைத்திருந்தால் தற்போது ஆண்டிப்பட்டி சார்பாக 6 பேர் கலந்து கொண்டு உள்ளார்கள் ஆனால் அங்கு வைத்திருந்தால் 600 பேர் வந்திருப்பார்கள் எனவும், எதிர்போ, ஆதரவோ அப்பகுதி மக்களிடம் கருத்துகளை கேட்டிருக்க வேண்டும் என்று கூறினார் இப்பகுதியில் நடத்துவது மாபெரும் தவறு எனவும், ஆண்டிப்பட்டி மக்களுக்கு தென்னம்பட்டி மக்கள் ஆதரவு தெரிவிப்பதாக கூறினார்.

13. <u>திரு.கலியுக முருகன் – ஆண்டிப்பட்டி</u>

அரசு அதிகாரிகள் குவாரி பகுதியை ஆராய வேண்டும் எனவும், 10 மீ தெலைவில் சாலை, கோவில் போன்றவை உள்ளதாகவும் இங்கு வந்த அனைவரும் வெளியூர் மக்கள் என்றும், ஆண்டிப்பட்டி பகுதியில் மீண்டும் ஒரு முறை கருத்து கேட்பு கூட்டத்தை நடத்த வேண்டும் என்று கேட்டு கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்த வருவாய் கோட்டாட்சியர், பழனி அவர்களுக்கு, அரசு துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், பத்திரிக்கை நண்பர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு அரசு கட்டுப்பாடு வாரியம்
திண்டுக்கல்.

வருவாய் கோட்டாட்சியர்,
பழனி வருவாய் கோட்டம்,
திண்டுக்கல்.

**<u>இணைப்பு:</u>**

1.பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2.பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல். (மொத்த பக்கம் 6 மற்றும் 80 நபர்கள்).
3.பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்.
4.பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.